விரோத சக்திகள் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டுமென்றும், இது குறித்து, சம்பந்தப்பட்ட மாநில அரசுகள் உரிய நடவடிக்கைகள் எடுத்துள்ளன, இனியும் தொடர்ந்து எடுக்குமென்றும் தெரிவித்தார். மேலும், கர்நாடக சட்டசபையில், அவைத் தலைவர் இது குறித்து யாரும் அரசுக்கு முறையீடு செய்யவில்லை என்றும், எனினும், சம்பந்தப்பட்டவர்களைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உறுதியளித்தார். தவிர, கர்நாடக அரசு, காவல் துறையில் இது குறித்து, ஒரு வழக்கு பதிவு செய்து, புலனாய்வு நடந்து வருகிறதென்றும் அவர் தெரிவித்தார். மேலே கூறியுள்ளவாறு கர்நாடகத்தில் தமிழர்களை அச்சுறுத்தும் வகையில் போஸ்டர்கள் ஒட்டியிருப்பது குறித்து, ஏற்கெனவே நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டு, கர்நாடக அரசும், உரிய நடவடிக்கை எடுத்துள்ளது. இனி இவ்வாறு நேராமல் தடுக்கப்படுமென்றும் உறுதியளிக்கப்பட்டுள்ளது. தவிர, பெங்களூரில் தமிழர்கள் தாக்கப்படுவது குறித்து புகார்கள் ஏதும் இவ்வரசுக்கு வரவில்லை. எனினும் நிலைமையை அரசு உன்னிப்பாக கவனித்து வருகிறது. பிற மாநிலங்களிலுள்ள தமிழர் நலனைக் காக்க, இவ்வரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கத் தயங்காது. அந்த அளவிற்கு மாநில அரசு பிற மாநிலங்களோடு தொடர்பு கொண்டு மிக எச்சரிக்கையோடு கண்காணித்து வருகிற காரணத்தால், இது குறித்து மேலும் விவாதிக்க இந்த அவையை ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவரவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இப்பொருள் குறித்து அவை நிகழ்ச்சிகளை ஒத்தி வைத்து விவாதிக்கத் தேவையில்லை என்று கருதி, அனுமதி மறுக்கிறேன்.

'2) தமிழ் நாடு பட்டதாரி ஆசிரியர்கள் கழகம் 24—3—1981 முதல் உண்ணா விரதப் போராட்டம் நடத்துவது குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன், திரு பா. ரா. தாமஸ், செல்வி அ. லீலாவதி, திரு செ. முத்துசாமி, திரு ஆ. நல்லசிவன், திரு க. மீனாட்சிசுந்தரம் ஆகியோர் தமிழ் நாடு பட்டதாரி ஆசிரியர்கள் கழகம் 24—3—1981 முதல் உண்ணாவிரதப் போராட்டம் நடத்துவது குறித்து ஓர் ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அது எவ்வாறு அந்த விதியின்கீழ் வருகிறதென்பதைச் சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர்கள் கழகம் 24—3—1981 முதல் உண்ணாவிரதப் போராட்டம் நடத்துவது குறித்து

[1981 மார்ச் 26

திரு. சி. இரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு தலைவரவர்களே, தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர்கள் கழகம் தன்னுடைய 9 அம்சக் கோரிக்கைகளை வைத்து, மூன்றாவது கட்ட நேரடி நடவடிக்கையாக சென்னையில் 24 ஆம் தேதி முதல் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். இதை அடுத்து மறியல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடப்போவதாக முடிவு செய்திருக்கிறார்கள். அவர்கள் கோரிக்கைகளில் பல கோரிக்கைகள் எளிதாகத் தீர்க்கப்பட வேண்டியவையாகும். குறிப்பாகச் சொல்லப் போனால், மேல் நிலைப் பள்ளிகளிலே பணியாற்றுகிற இன்டக்டட் ஆசிரியர்களுக்கு சிறப்பு ஊதியம் 75 ரூபாய் தரப்பட வேண்டுமென்றும், அவர்கள் தங்களைத் தகுதிப்படுத்திக் கொள்ள வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டுமென்றும், அவர்களுடைய பணி விதிமுறைகளை வெளிப்படுத்த வேண்டுமென்றும், இதுபோன்ற சில முக்கியமான கோரிக்கைகளை அடிப்படையாக வைத்து, நேரடி

(முற்பகல் 10-00)

நடவடிக்கைகளிலே இறங்கியிருக்கிறார்கள். ஆக இது சுமுகமாகத் தீர்க்கப்பட வேண்டிய ஒரு பிரச்சினை. இந்தப் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்க்கா விட்டால், சுமார் 25 ஆயிரம் ஆசிரியர்கள் இதில் நேரடியாக இறங்கக் கூடிய நிலையும் அதன் காரணமாக மாணவர்களுடைய கல்வி பாதிக்கப்படக்கூடிய நிலையும் ஏற்படும். ஆகவே இது ஆசிரியர்கள், மாணவர்கள் சம்பந்தப்பட்ட மிக முக்கியம் வாய்ந்த பிரச்சினை என்ற காரணத்தினாலே, இந்த அவையினுடைய மற்ற அலுவல்களை ஒத்தி வைத்து, இதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : திரு. பா. ரா. தாமஸ்.

திரு. பா. ரா. தாமஸ் : தலைவரவர்களே, ...

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் மீது ஒருவர் பேசுவது தான் மரபு. ஒருவர் சொல்லிவிட்டார். அவர் பேசியதையே தாங்களும் பேச வேண்டாம்.

திரு. பா. ரா. தாமஸ் : தலைவரவர்கள் என்னைப் பேசுவதற்கு ஏற்கெனவே அனுமதித்து விட்டதால், ஒன்றிரண்டு வார்த்தைகளை மட்டும் பேசுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஆசிரியர் பிரச்சினையாக இருப்பதால், மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் பேசியிருந்தாலும் கூட, தாங்களும் பேசுவதற்கு அனுமதிக்கிறேன்.

திரு. பா. ரா. தாமஸ் : மாணவர்களைத் தேர்வுக்கு அனுப்பிவிட்டுத்தான் இந்த ஆசிரியர்கள் போராட்டத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். பொதுவாகவே பணிப் பாதுகாப்பு இன்றையதினம் சிறுபான்மையினரால் நடத்தப்படுகிற பள்ளிகளில் இல்லை. ஊதியத்திலுள்ள முரண்பாடு குறித்தும், ஒரு நபர் குழு அறிக்கை குறித்தும், பணி நீக்கம் குறித்தும் ஒன்பது அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி வருகிறார்கள். இது உண்மையான, உணர்ச்சிபூர்வமான ஒரு பிரச்சினை. இது ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட மிக முக்கியம் வாய்ந்த பிரச்சினை என்ற காரணத்தினாலே, இதுகுறித்து சில மணி நேரம் ஒதுக்கி விவாதித்து உடனடியாக முடிவு காண வேண்டிய நிலை இருப்பதால், இந்த அவையினுடைய மற்ற அலுவல்களை ஒத்தி வைத்து, இதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(திரு. செ. முத்துசாமி இருக்கையிலிருந்து எழுந்தார்)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஒத்தி வைப்புத் தீர்மானம் என்றால் ஏற்கெனவே நாம் ஒரு மரபைக் கடைப்பிடித்து வருகிறோம். இப்போது ஏழு பேர் இந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் சம்பந்தமாகப் பெயர் கொடுத்திருக்கிறார்கள். ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினையாக இது இருப்பதால், மரபிலிருந்து விலக்கு அளித்து மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுவதற்கு வாய்ப்பு அளித்திருக்கிறேன். ஆனால், ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியதையே சொல்லாமல் பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, ஏற்கெனவே மற்றவர்கள் சொல்லியதையே சொல்கிற குற்றத்துக்கு ஆளாகாமல் நான் பேச முற்படுகிறேன். இந்த விஷயத்தில் மாண்புமிகு தலைவரவர்கள் காட்டிய வழியில் நான் செல்கிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள், பட்டதாரி ஆசிரியர்கள் பிரச்சினை சம்பந்தமாக எடுத்துச்சொன்னார்கள். உச்ச நீதி மன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட்டு ஆண்டுக்கணக்காக ஆகியும் இன்னும் அந்தத் தீர்ப்பு அமுல்படுத்தப்படவில்லை. ஆதலால் இன்றையதினம் ஆசிரியர்கள் போராட்டத்திற்குத் தள்ளப்படக் கூடிய நிலைமைக்கு ஆளாகியிருக்கிறார்கள். சில கோரிக்கைகளைப் பொறுத்தவரை, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இரண்டொரு முறை இந்த அவையிலேயே உறுதிமொழி அளித்திருக்கிறார்கள். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அளித்த உறுதிமொழிகளைக் கூட கல்வித் துறை நிர்வாகம் இதுவரை நிறைவேற்றவில்லை. காலம் பல காத்திருந்தும் அவர்கள் குறை களையப்படாததால் இன்றைக்கு ஆசிரியர்கள் தெருவுக்கு வந்து போராடிக்கொண்டிருக்கிறார்கள். எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு

ஆரம்பமாகிவிட்டபோதிலும், இன்னும் மற்ற தேர்வுகள் எல்லாம் நடைபெற வேண்டியிருக்கிற நிலையில் பள்ளிகள் எல்லாம் மூடப்படக் கூடிய அபாயம் இருப்பதாலும், மாணவர்களும் இந்தப் போராட்டத்தில் தொடர்ந்து குதிக்கக் கூடிய அபாயம் ஏற்பட்டிருப்பதாலும், முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் இன்றையதினம் உண்ணாவிரதம் இருப்பதாலும், மேல் நிலைக் கல்வி அமுலுக்கு வந்து மூன்று ஆண்டுகள் முடிந்த போதிலும், அவர்களுடைய சர்வீஸ் லிஸ்ட், சீனியாரிட்டி லிஸ்ட், பணி நிலைமை போன்றவற்றைப் பற்றி இதுவரை முடிவெடுக்காததாலும், ஆசிரியர்களின் பிரச்சினைகள் நீண்ட காலமாகத் தீர்க்கப்படாமல் இருப்பதாலும், பள்ளிகள் எல்லாம் மூடப்படக்கூடிய அபாயம் இருப்பதாலும், இது ஆசிரியர்கள், மாணவர்கள் சம்பந்தப்பட்ட மிக முக்கியம் வாய்ந்த பிரச்சினை என்ற காரணத்தினாலே, இந்த அவையினுடைய மற்ற அலுவல்களை ஒத்தி வைத்து, இதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(திரு. ஆ. நல்லசிவன் இருக்கையிலிருந்து எழுந்தார்)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் ஆசிரியர் தொகுதி பிரதிநிதி அல்ல. அவர்களும் அவசியம் பேச வேண்டுமா ? (சிரிப்பு)

திரு. ஆ. நல்லசிவன் : தலைவரவர்களே, ஒரே ஒரு விஷயத்தைப்பற்றி மட்டும் சொல்கிறேன். சென்னை மாநகராட்சிப் பள்ளிகளிலுள்ள ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், ஒரு முக்கியமான பிரச்சினை எழுந்துள்ளது. இன்டக்டட் ஆசிரியர்கள் என்று இருந்துகொண்டிருக்கிறார்கள். கார்ப்பரேஷன் கல்வி அதிகாரியும் அவரது உதவியாளரும் இன்டக்டட் ஆசிரியர்களுக்கு வாய்ப்பினை அளிக்காமல் புதிதாக ஆசிரியர்களை நியமிக்கிறார்கள். இதனால் இன்டக்டட் ஆசிரியர்களுக்குப் பாதகம் ஏற்பட்டுள்ள நிலையில், ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட மிக முக்கியம் வாய்ந்த பிரச்சினை என்ற காரணத்தினாலே, அவர்கள் போராடிக்கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையில், பெரிய பிரச்சினையாக இது ஆசிரியர்கள் மத்தியில் உருவெடுத்துவிடாமல் இருப்பதற்காக, இந்த அவையினுடைய இதர அலுவல்களை ஒத்தி வைத்து, இதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவரவர்களே, பட்டதாரி ஆசிரியர்கள் வைத்திருக்கிற கோரிக்கைகள் சாதாரணமாக நடைமுறை அலுவல்களிலே இருக்கக்கூடியவைதான். கமிஷன் சர்வீஸ் லிஸ்ட், சீனியாரிட்டி லிஸ்ட் கூட

இதுவரை வெளியிடப்படவில்லை. இதைக் கூட வெளியிடாமல் இந்தத் துறை என்ன செய்துகொண்டிருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை. ஆனால் ஒன்றே ஒன்றைப்பற்றி மட்டும் சொல்ல ஆசைப்படுகிறேன். பிகார் மாநிலத்திலே தனியார் பள்ளிகளை எல்லாம், சிறுபான்மையினர் பள்ளிகளை எல்லாம் அரசாங்கம் எடுக்கவில்லையென்று இங்கே சொல்லிக்கொண்டிருக் கிறார்கள். நான் அறிந்தவரையில், சிறுபான்மையினர் பள்ளிகளைக் கூட அங்கே அரசு எடுத்திருக்கிறது. ஆனால் மதம் சம்பந்தப்பட்ட போதனையைப் பொறுத்தவரையில் மட்டும், பள்ளி நேரம் ஆரம்பிப்பதற்கு முன்னால் அல்லது பின்னர் வைத்துக்கொள்வதில் அரசாங்கம் தலையிட மாட்டோம் என்றும், மற்ற விஷயங்கள் எல்லாவற்றிலும் தலையிடுவோம் என்றும் உறுதியளித்திருக் கிறார்கள். இந்த அரசைப் பொறுத்தவரையிலும் கூட, தனியார் பள்ளிகளில் பணியாற்றக் கூடிய ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பற்ற நிலையில் இன்றைய தினம் ஆசிரியர்கள் மத்தியில் போராட்டம் உருவெடுத்துள்ள நிலையில் இதைப் பற்றி விரிவாக இந்த அவையிலே விவாதித்து ஒரு முடிவுக்கு வரத்தக்க ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட மிக முக்கியம் வாய்ந்த பிரச்சினை என்ற காரணத்தினாலே, இந்த அவையினுடைய இதர அலுவல்களை ஒத்தி வைத்து, இதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(செல்வி அ. லீலாவதி இருக்கையிலிருந்து எழுந்தார்)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினருடைய கட்சியைச் சேர்ந்த மூன்று பேர் ஏற்கெனவே ரொம்பப் பேசி விட்டார்கள். (சிரிப்பு) அவர்கள் பேசியதையே உறுப்பினர் அவர்களும் பேச வேண்டாம்.

செல்வி அ. லீலாவதி : ஏற்கெனவே மூன்று பேர் சொல்லியதுபற்றி நான் சொல்லப்போவதில்லை. சென்னை மாநகராட்சிப் பள்ளிக் கூடத்தில் பணியாற்றி வந்த இரண்டு எம்.எஸ்ஸி. படித்த இன்டகட்ட் ஆசிரியர்களுக்குப் பதவி ஏற்றம் கொடுக்காமல் வேண்டுமென்றே அவர்களுக்குப் பதவி இறக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அவர்களுக்கு வேண்டியவர்களுக்குப் பதவி ஏற்றம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே இன்டகட்ட் ஆசிரியர்களாக இருந்தவர்களை வேண்டுமென்றே பதவி இறக்கம் செய்திருக்கிறார்கள். இது குறித்து கல்வி அதிகாரிக்கும், கார்ப்பரேஷன் கமிஷனருக்கும் பலமுறை முறையிட்டும் முறையாக நடவடிக்கை எடுக்கவில்லை. மூன்று ஆண்டுகளாகக் கற்பித்துக்கொண்டிருப்பவர்களை, மார்ச் மாதம் மாணவர்கள் ஆங்கிலப் பரீட்சை எழுத வேண்டிய நிலை இருக்கும்போது, பிப்ரவரி மாதத்திலிருந்தே வேலையிலிருந்து இறக்கம் செய்திருக்கிறார்கள். நாங்கள் பலமுறை இது குறித்து மாநகராட்சிக் கல்வி அதிகாரிக்கும், சென்னை மாநகராட்சி

ஆணையாளருக்கும் முறையிட்டும் இதுவரை பிரச்சினைக்குத் தீர்வு காண வில்லையாதலால், இன்றையதினம் ஆசிரியர்கள் போராட்டத்தில் இறங்கி யிருக்கிறார்கள். இது ஆசிரியர்கள் தொடர்புடைய மிக முக்கியம் வாய்ந்த பிரச்சினையாக இருக்கிற காரணத்தினாலே, இந்த அவையினுடைய இதர அலுவல்களை ஒத்தி வைத்து, இதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, பட்டதாரி ஆசிரியர் கழகம் விடுத்துள்ள ஒன்பது அம்சக் கோரிக்கைகளைக் குறித்து, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் ஓர் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். பட்டதாரி ஆசிரியர் கழகத்தினுடைய பிரதிநிதிகள், அதன் தலைவர் திரு. மயில்சாமி இன்னும் மற்றவர்களும் கல்விச் செயலாளருடன் தங்கள் கோரிக்கைகள் குறித்துப் பேசியிருக்கின்றார்கள். மேலும் பேசிக் கொள்ளக் கூடிய வாய்ப்பு இன்னும் இருக்கிறது. அக்கோரிக்கைகள் மீது மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அவர்கள் வலியுறுத்தியுள்ள கோரிக்கைகள் குறித்தும் அவற்றின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் நான் இங்கே சில விவரங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

(1) மேல்நிலைப் பள்ளிகளில் தற்போது உட்படுத்தப்பட்டுள்ள முதுகலைப் பட்டம் பெறாத அறிவியல் மற்றும் கணிதம் போன்ற பாடங்களில் தகுதி பெற ஆவன செய்ய வேண்டும்.

இது பல்கலைக் கழகங்கள் முடிவு செய்ய வேண்டியது. கல்லூரிகளில் விடுமுறைக் கால வகுப்புகள் நடத்துவதற்கும் மற்றும் மாலை நேர வகுப்புகள் கல்லூரிகளில் நடத்துவதற்கும் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கல்விச் செயலாளருடன் அவர்கள் கலந்து பேசியபோது அப்படி வகுப்பு களுக்குச் செல்லும் காலத்தில் ஆசிரியர்களுக்கு உதவிப் பணம் கொடுக்க வேண்டுமென்று கோரினர். இதுபற்றியும் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. இந்தப் பயிற்சி வகுப்பை மே மாதம் 1 ஆம் தேதி ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இது எனக்கு வாய்மூலம் சொல்லப்பட்ட செய்தி என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(2) மேல்நிலைப் பள்ளிகளில் உட்படுத்தப்பட்டுள்ள முதுகலைப் பட்டம் பெறாத ஆசிரியர்களுக்கு வழங்கும் சிறப்பு ஊதியத்தினை ரூபாய் 25-லிருந்து உயர்த்திக் கொடுக்கவேண்டும்.

இது குறித்தும் நாங்கள் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம்.

(3) தனியார் பள்ளிகளில் தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்ட, செய்யப்படுகிற ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களுக்கு பிழைப்பு ஊதியம் தவறாது வழங்க வேண்டும்.

இது குறித்து தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (வரன்முறைப் படுத்தும்) விதிகள் 1974-ஐ தக்க முறையில் திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இது குறித்து ஆணை விரைவில் வெளியிடப்படும்.

(4) மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கான பணி விதிகள் வெளியிடப் படவேண்டும்.

இப்பணி விதிகள் தயாரிக்கப்பட்டு, தேர்வாணைக் குழுவுடனும் கலந்து முடிவு செய்யப்பட்டுள்ளது. இதுவும் வெகு விரைவில் வெளியிடப்படும்.

(5) அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ள 17 நகரவைப் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களின் பணியினை பணியில் சேர்ந்த நாள் முதல் கணக்கில் கொள்ள வேண்டும்.

இந்தக் கோரிக்கையும் அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது. விரைவில் ஒரு முடிவெடுத்து ஆணை வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பல்வேறு துறைகளைக் கலந்து ஆலோசனை செய்ய வேண்டியிருக்கிறது. முறையாகப் பரிசீலனை செய்து, மற்ற துறைகளை எல்லாம் கலந்தாலோசித்து, தேர்வாணைக் குழுவையும் கலந்து முடிவுக்கு வர வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அதனால்தான் இத்தகைய காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. எந்த அளவுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் சொல்லிய விவரத்திலிருந்து மாண்புமிகு உறுப்பினர்கள் புரிந்துகொள்வார்கள் என்று கருதுகிறேன். ஆகவே விரைவில் முடிவெடுத்து வெளியிடப்படுகின்ற நிலை இருக்கிற வேளையில் ஆசிரியர்கள் பல்வேறு பிரச்சினைகளைக் கிளப்பி, அந்தப் பழிக்கு அவர்கள் ஆளாகக் கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த நேரத்தில் பட்டதாரி ஆசிரியர்களும் தங்களுடைய போராட்டத்தைக் கைவிட்டுவிட்டு அரசுக்கு முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பேசியே பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள நிரம்ப வாய்ப்பு இருக்கிறது. பேசி பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான வாய்ப்பினை, இந்த அரசைப் பொறுத்தவரையில், ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளுக்குத் தாராளமாக வழங்கி யிருக்கிறோம். அவற்றையெல்லாம் பயன்படுத்திக்கொண்டு ஆசிரியர் சங்கப்

பிரதிநிதிகள் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முன்வர வேண்டும். இந்த அளவுக்கு அரசு துரிதமாக நடவடிக்கை எடுத்துள்ளதாலும், சங்கப் பிரதிநிதிகள் பேசி பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான வாய்ப்பு இருப்பதாலும், இதை விவாதிக்க அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இதுபற்றி விவாதிக்க, அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லையென்று கருதுவதால், இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான அனுமதியை மறுக்கிறேன்.

(முற்பகல் 10-10)

3. கவன ஈர்ப்பு.

(1) மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கான பணிவிதி முறைகள் வெளியிடப்படாததன் காரணமாக, அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் இயல்பான பிற உரிமைகள் கிடைக்காமல் அவதிப்படுவது குறித்து.

திரு. சி. நா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த கீழ்க்காணும் நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

"மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆயிரக்கணக்கான ஆசிரியர் களுக்கான பணி விதிமுறைகள் (சர்வீஸ் ரூல்ஸ்) இன்னமும் வெளியிடப் படாததால் அந்த ஆசிரியர்களுக்கான ஆண்டு ஊதிய உயர்வு (இன்கிரிமெண்ட்) மற்றும் இயல்பாகக் கிடைக்க வேண்டிய உரிமைகள் கிடைக்காமல் அவதிப் படுவது குறித்து".

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இது குறித்து விவர அறிக்கை @ ஒன்று அவைமுன் வைக்கப் பட்டுள்ளது.

@ 417 ஆக அச்சிடப்பட்டுள்ளது. I ஆம் பக்கத்தில் இணைப்பு